பக்கங்கள்: நான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5.00

மலர்: 6 திருவள்ளுவர் ஆண்டு 2022 ஐப்பசி 22 வெள்ளிக்கிழமை [08-11-1991] UTHAYAN — A Lively National Tamil Daily கதிர்: 339

# இலங்கைக்கு சகல உதவியும் வழங்க பாகிஸ்தான் தயார்!

## பிரதமர் ஷெரீப் கொழும்பில் அறிவிப்பு

கொழும்பு, நவம்பர் 8

ஸ்ரீலங்காவுக்கு தேவை ஏற்படும்போது - எந்த நேரத்திலும் - எந்த உதவியையும் அளிக்க பாகிஸ்தான் தயாராக இருக்கிறது.

பாகிஸ்தான் பிரதமர் நவாஸ் ஷெரீப் நேற்று கொழும்பில் இவ்வாறு பகிரங்கமாக அறிவித்தார்.

தமக்கும், பங்களாதேஷ், மாலைதீவு தலைவர்களுக்கும் அளிக்கப்பட்ட வரவேற்புக்கு பதிலளித்துப் பேசுகையில் அவர் இதனை அறிவித்தார்.

நேற்று கொழும்பு பண்டாரநாயக்கா சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் மூன்று தலைவர்களுக்கும் ஜனாதிபதி பிரேமதாஸ அளித்த வரவேற்பில் கலந்துகொண்டு அவர் உரையாற்றினார்.

பிரதமர் நவாஸ் ஷெரீப் மேலும் கூறியதாவது:

நீதி, நியாயம் ஆகியவற்றில் நம்பிக்கை வைத்து ஸ்ரீலங்கா செயற்படுகிறது. ஸ்ரீ

(4 ஆம் பக்கம் பார்க்க)

## உணவுப் பொருள்கள் 'லில்லி' கப்பலில் வந்தன

யாழ்ப்பாணம், நவ. 8

நேற்று முன்தினம் பருத்தித்துறை துறைமுகத்தை வந்தடைந்த 'லில்லி' கப்பலில் 3 ஆயிரத்து இருநூறு மெற்றிக் தொன் உணவுப் பொருள்கள் கொண்டுவரப்பட்டுள்ளன.

ஆயிரத்து 500 மெற்றிக் தொன் அரிசி, ஆயிரத்து 200 மெற்றிக் தொன் மா, நூறு மெற்றிக் தொன் பருப்பு, 56 மெற்றிக் தொன் பால்மா,

(4 ஆம் பக்கம் பார்க்க)

## முச்சந்தி முரளி



உவர் எந்த விதமான உதவியை உத்தமருக்கு வழங்கப் போறாராம்......?

## 5 கோடி ரூபா வீணானது!

கொழும்பு, நவ. 8

சார்க் மாநாட்டை நடத்துவதற்கான ஏற்பாடுகளுக்காக ஸ்ரீலங்கா அரசு ஐந்து கோடி ரூபாவரை செலவிட்டது என தேசிய ஒலிபரப்பு வானொலி அறிவித்தது.

மாநாடு குழம்பியதால் இந்தச் செலவு வீணாகிப்போயிருப்பதாகவும் விமர்சிக்கப்பட்டது.

(உ-எ-8)

## இந்தியாவின் பிடிவாதமே மாநாடு குழம்பக் காரணம்!

### ஜனாதிபதி பிரேமா குற்றச்சாட்டு

கொழும்பு, நவ. 8

"இந்தியாவின் பிடிவாதத்தினாலேயே சார்க் மாநாடு நடத்த முடியாத நிலை ஏற்பட்டது."

— தெற்காசிய நாடுகளின் தலைவர்கள் மூவருக்கு, நேற்று கொழும்பில் அளிக்கப்பட்ட வரவேற்பின் போது ஜனாதிபதி பிரேமதாஸா இப்படிக் குறிப்பிட்டார்.

பங்களாதேஷ் பிரதமர் பேகம் காலிதா ஸியா, பாகிஸ்தான் பிரதமர் நவாஸ் ஷெரீப் மற்றும் மாலைதீவு ஜனாதிபதி மாமூன் அப்துல் கையூம் ஆகியோருக்கு இலங்கை அரசு நேற்று மாலை பண்டாரநாயக்கா ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் வைத்து பொதுவரவேற்பளித்து, கௌரவித்தது.

"பூட்டான் மன்னர் வரமுடியாத நிலையில் அவரின் அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதி ஒருவர் பங்குபற்றக்கூடியதாக, சார்க் மாநாட்டை நடத்தலாம் என்ற இலங்கையின் நிலைப்பாட்டை இந்தியா ஏற்க மறுத்ததாலேதான் மாநாடு

[4 ஆம் பக்கம் பார்க்க]

# செஞ்சிலுவையினர் 15 இல் தீவுப் பகுதிக்குச் செல்வர்!

யாழ்ப்பாணம், நவ. 8

தீவுப்பகுதியில் சிக்கியுள்ளவர்களின் நலன்கள் குறித்துக் கண்டறிவதற்கு செஞ்சிலுவை அதிகாரிகளும், சுகாதாரப் பகுதி அதிகாரிகளும் எதிர்வரும் 15 ஆம் திகதி அங்கு செல்வதற்கு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

வேலணை, ஊர்காவற்றுறை, நெடுந்தீவு உதவி அரச அதிபர் பிரிவில் படையினரிடம் சிக்கியுள்ளவர்களின் நிலைகுறித்து இவர்கள் அங்கு நேரில் சென்று ஆராய்வார்கள்.

அங்குள்ளோருக்குக் கிடைக்கும் வைத்திய, உணவு வசதி மற்றும் வயோதிபரின் நிலை ஆகியவை குறித்து அவர்கள் நேரில் கண்டறிந்து ஆராய்வார்கள் எனத் தெரிவிக்கப்பட்டது.

[உ-8]

## கடற்படை அதிகாரிகளுடன் செஞ்சிலுவையினர் சந்திப்பு

யாழ்ப்பாணம், நவ. 8

காங்கேசனுக்கு உணவுக் கப்பல்களை அனுப்புவது சம்பந்தமான ஒழுங்குகளை ஆராய்ந்து வகுத்தல், தீவுப் பகுதியில் சிக்குண்ட மக்களுக்கு மருத்துவ வசதி அளித்தல் ஆகிய விடயங்கள் குறித்து காரைநகர் கடற்படை அதிகாரிகளுடன், செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுப் பிரதிநிதிகள் நேற்றுக் கலந்துரையாடினர் எனத் தெரிய வந்தது.

கொழும்பிலிருந்து உணவுப் பொருள்களை காங்கேசன் துறைமுகத்துக்குக் கப்பல் மூலம் கொண்டு வருவது சம்பந்தமாக இணக்கம் காணப்பட்டபோதிலும் அதற்கான நடைமுறை விவரங்கள் (Modelities) இன்னும் திர்மானிக்கப்படவில்லை.

காங்கேசன்துறை துறைமுகத்தில் இறக்கப்படும்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## இன்று தபால் விநியோகம்

யாழ்ப்பாணம், நவ. 8

யாழ். நகரப் பகுதியில் இன்று வெளியூர்த் தபால் விநியோகம் நடைபெறும் எனத் தெரிவிக்கப்பட்டது.

நேற்று முன்தினம் பருத்தித்துறை துறைமுகத்தை வந்தடைந்த 'லில்லி' கப்பலில் வெளியூர்த் தபால்கள் அடங்கிய 124 பொதிகள் எடுத்துவரப்பட்டுள்ளன.

அவற்றில் யாழ். பிரதம தபாலகத்துக்குரிய 111 பொதிகள் நேற்று மாலை யாழ். நகருக்கு எடுத்துவரப்பட்டன.

ஏனைய இடங்களுக்கான தபால் பொதிகள் அந்தந்தப் பகுதி உப தபால் அலுவலகங்களுக்கு இன்று அனுப்பப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது.

[உ-5-165]

## பலாலி ராணுவத்தினருடன் புலிகள் கடும் மோதல்

காங்கேசன்துறை, நவ. 8

பலாலியைச் சேர்ந்த கட்டுவன், சந்தைச்சந்தி மினி முகாம்களில் இருந்து நேற்று அதிகாலை 2 மணியளவில் வெளியேற முற்பட்ட இராணுவத்தினருடன், விடுதலைப் புலிகள் போராளிகள் கடுமையாக மோதினர்.

விடுதலைப் புலிகளின் கடும் தாக்குதலைத் தொடர்ந்து இராணுவத்தினர் மீண்டும் தமது நிலைகளுக்குத் திரும்பிச் சென்றனர்.

அங்கிருந்து படையினர் குடியிருப்புப் பகுதிகளை நோக்கி அதிகாலை 4 மணி வரை வேட்டுக்களைத் தீர்த்ததுடன், ஷெல் மற்றும் ஷெல் தாக்குதல்களையும் நடத்தினர்.

இதேசமயம், நேற்று முன்தினம் இரவு 8 மணியளவிலும் பலாலி இராணுவத்தினருடன் கடும் மோதல் இடம்பெற்றது.

[ஓ-3-68]

# மாவீரர் நாள் அலங்காரம்; குடாநாடு களைகட்டுகிறது

யாழ்ப்பாணம், நவ. 8

மாவீரர் நாளைமுன்னிட்டு குடாநாடு எங்கும் அலங்காரப் பந்தல்கள், வளைவுகள் அமைக்கும் வேலைகள் ஆரம்பமாகியுள்ளன.

மாவீரர் நாள் சம்பந்தப்பட்ட அலங்காரம் மற்றும் பல்வேறு வகைப்பட்ட ஆரம்ப வேலைகளில் அவ்வப் பகுதி மக்கள் ஆர்வமுடன் ஈடுபட்டுத் தொடங்கியுள்ளனர்.

சுன்னாகம் பட்டினப் பகுதியில் மூன்று அலங்கார வளைவுகள் அமைக்கப்பட்டுள்ளன. அவை எழிலுடன் காட்சியளிக்கின்றன.

யாழ். மானிப்பாய் வீதியில்—ஆனைக்கோட்டை நவாலி வீதிச் சந்தியிலும், மானிப்பாய் சங்கரப்பிள்ளை வீதி, உடுவில் — சண்டிலிப்பாய் வீதிச் சந்திகளிலும் வீதி வளைவுகள் காணப்படுகின்றன.

அலங்கார வளைவுகளில் காணப்படும் சித்திரங்கள்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## சாவகச்சேரியில் ஹெலி தாக்கு

யாழ்ப்பாணம், நவ 8

சாவகச்சேரிப் பகுதியில் நேற்று நண்பகல் 12 மணி அளவில் வட்டமிட்ட ஹெலி, சந்தைப் பகுதியை நோக்கி கலிபர் தாக்குதலை நடத்தியது.

இதனால் வீடுகள் சேதமடைந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

(ஓ-8-117)

## சவர்க்காரம் பெருமளவில் வந்தது; விலை குறையலாம்

யாழ்ப்பாணம், நவ. 8

இரண்டு தனியார் விற்பனையாளர்களின் பெயரில் 110 மெற்றிக் தொன் சவர்க்காரம் 'லில்லி' கப்பலில் எடுத்துவரப்பட்டுள்ளது.

"சவறின் பார்", "சந்திரிகா", "அவேந்திரா", "ஏஞ்சல் பேபி" "சூறன் அண்ட் டே" போன்ற ரகங்களைச் சேர்ந்தகமார் நான்கு இலட்சத்துக்கு மேற்பட்ட சவர்க்காரக் கட்டிகளும்— சலவைப் பவுடர் பக்கெட்டுகளும் 'லில்லி' கப்பலில் எடுத்துவரப்பட்டிருக்கின்றன.

கணிசமான அளவு சவர்க்காரம் இம்முறை கப்பலில் வந்துள்ளதால் வெளிச் சந்தையில் சவர்க்கார வகைகளின் விலைகளில் வீழ்ச்சி ஏற்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

[அ-5]

# அகதி முகாம் குழந்தைகள் போஷாக்கின்றிப் பாதிப்பு!

## ஆய்வு தரும் தகவல்

யாழ்ப்பாணம், நவ. 8

யாழ். மாநகர சபை எல்லைக்குள் அமைந்துள்ள பன்னிரண்டு அகதி முகாம்களில் தங்கியுள்ள குழந்தைகள் மந்த போஷாக்குடையவர்களாக மாறியுள்ளனர்.

யாழ். மாநகர சபையின் சுகாதாரப் பகுதியினர் மேற்கொண்ட ஆய்வு ஒன்றிலிருந்து குழந்தைகள் போஷாக்கின்மையால் பாதிக்கப்பட்ட விடயம் தெரியவந்துள்ளது.

குழந்தைகளில் பல்வேறு வயதினர்களை நிரல்படுத்தி மேற்கொள்ளப்பட்ட ஆய்வில் இரண்டு வயதுக்குக் குறைந்த குழந்தைகள் போஷாக்கின்மையால் மிகப் பயங்கரமாகப் பாதிக்கப்பட்டிருப்பது தெரிய வந்துள்ளது.

போஷாக்கு நிறைந்த உணவுப் பொருள்களுக்கு பெரும் தட்டுப்பாடு நிலவுவதாலேயே இந்தப் பாதிப்பு ஏற்பட்டுள்ளதாகக் கருதப்படுகிறது.

குழந்தைகளுக்கு வேண்டிய திரிபோஷா

(4 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## வஞ்சம் தீர்த்தது!

கொழும்பில் நேற்றுக் கோலாகலமாகத் தொடங்கியிருக்க வேண்டிய தெற்காசிய நாடுகள் மன்றத்தின் (சார்க்) உச்சி மாநாடு திட்டமிட்டபடி நடக்கவில்லை. காலவரையறை இன்றி ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

கொழும்பு மாநாடு மிகக் கடைசி நேரத்தில் ரத்தாவதற்கு இந்தியாவே காரணம் என்பது அரசியல் அவதானிகளின் கணிப்பு. ஸ்ரீலங்கா அரசாங்கத்தின் குற்றச்சாட்டும் அதுவே. உண்மையும் அதுதான்.

கொழும்பு மாநாட்டை பொய்க் காரணங்களைக் காட்டி இந்தியா குழப்ப முயற்சிப்பதாக ஸ்ரீலங்கா அரசு அக்டோபர் முதல் வாரத்திலேயே குற்றஞ்சாட்டி இருந்தது.

உச்சி மாநாட்டில் கலந்து கொள்ளாமல் இருக்கவே இந்தியா விரும்பியது. மாநாட்டில் தங்கள் பிரதமர் திரு. நரசிம்மராவ் கலந்து கொள்வது உயிராபத்து நிறைந்தது என்று இந்திய வெளி விவகார அமைச்சின் பேச்சாளர் அக்டோபர் மூன்றாம் திகதியே ஒரு "டோஸ்" போட்டிருந்தார்.

1989 இல் கொழும்பில் நான்காவது சார்க் உச்சி மாநாட்டை நடத்த ஜனாதிபதி பிரேமதாசா மறுத்திருந்தார். ஸ்ரீலங்காவின் ஒரு பகுதியில் [வடக்கு-கிழக்கில] வெளிநாட்டுப் படை நிலை கொண்டிருப்பதால் மாநாட்டை நடத்த விரும்பவில்லை என்ற காரணத்தையும் வெளிப்படுத்தியிருந்தார்.

பிரேமதாசாவின் இந்தக் "தலைக்கனத்துக்கு" ஒரு பாடம் படிப்பிக்க வேண்டும் என்பதே இந்தியாவின் உள் நோக்கம். எப்படியாவது வஞ்சம் தீர்க்க, பதிலடி கொடுக்க இந்தத் தருணத்தைப் பயன்படுத்த அது திட்டமிட்டது.

அந்தத் திட்டத்தின் ஓர் அங்கமாகவே உயர் தலைவர் (பிரதமர்) தரத்துக்குக் குறைந்த தரத்தில் உள்ள ஒருவரை கொழும்புக்கு அனுப்ப அது முயற்சித்தது. ஜனாதிபதி பிரேமதாசா வே கலந்துரையாடியதைத் தொடர்ந்து, பிரதமர் ராவ் 24 மணித்தியாலங்கள் மட்டும் கொழும்பில் தங்க இணக்கம் தெரிவித்தார்.

எனினும் பூட்டான் மன்னர் வான்சுக மூலம் தனது கபட எண்ணத்தை இந்தியா நிறைவேற்றிக்கொண்டது மன்னர் நாட்டைவிட்டு வர முடியாத அளவுக்கு அங்கு பெரிய நெருக்கடி எதுவும் இல்லை!

ஆகவே, கொழும்பு மாநாட்டைக் குழப்பியதன் மூலம் பிரேமதாசா மீது இந்தியா வஞ்சம் தீர்த்திருக்கிறது என்பது மிகவும் வெளிச்சமான ஒன்று! தெற்காசியப் பிராந்தியத்தில் தன்னை எவரும் விஞ்சிவிட முடியாது என்பதையும், தன்னால் எதனையும் சாதிக்க முடியும் என்பதையும் அது செயலில் காட்டியுள்ளது.

ஆகையால் இது ஸ்ரீலங்காவுக்கு மட்டுமன்றி ஏனைய தெற்காசிய நாடுகளுக்கும் விழுந்துள்ள அடி என்று கருதப்பட வேண்டும்! அயல் நாடுகளுடன் நேயஉறவுகளையும், நெருக்கமான பாங்கினையும் கடைப்பிடிக்கப் போவதாக அடிக்கடி இந்தியா கூறி வந்தாலும்—

தனது சட்டாம்பிள்ளைத் தனத்தைக் காட்டுவதே அதன் வெளியுறவுக் கொள்கை என்பதை இதிலிருந்து புரிந்து கொள்ளலாம். வீடு கொளுத்தும் இராசாவுக்கு நெருப்புக் கொடுக்கும் மந்திரியாகத் திரு. டிக்ஸிற் வெளியுறவுச் செயலாளராகப் பதவி ஏற்பதும் அதற்கான படுசகுனமாகும்!

## வேலணைக் கல்விக் கோட்ட கூட்டம்

யாழ்ப்பாணம், நவ. 8

வேலணைக் கல்விக் கோட்ட கல்வி அபிவிருத்திக் கழகத்தின் அங்குரார்ப்பணக் கூட்டம் நாளை மறுதினம் (ஞாயிறு) பிற்பகல் 2 மணிக்கு யாழ். வைத்தீஸ்வராக் கல்லூரியில் நடக்க இருக்கிறது.

வேலணைக் கல்விக் கோட்ட கொத்தணி அதிபர்களையும், பாடசாலை அதிபர்களையும், அபிவிருத்திச் சபைச் செயலாளர்கள், பொருளாளர்களையும் இக் கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு பிரதிக் கல்விப் பணிப்பாளர் கேட்டுள்ளார்.

இதேவேளை —

வேலணைக் கல்விக் கோட்ட பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள் ஆகியோரை நாளை மறுதினம் (ஞாயிறு) முற்பகல் 9 மணிக்கு வைத்தீஸ்வரா வித்தியாலயத்தில் நடக்கவிருக்கும் கருத்தரங்கில் பங்குபற்றுமாறு பிரதிக் கல்விப் பணிப்பாளர் கேட்டுள்ளார். (ஓ)

## தென்மராட்சியில் நாளை முதல் மாவீரர் தின கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், நவ. 8

தென்மராட்சிப் பிரிவில் வட்டவை பிரதேச ரீதியாக மாவீரர் நாள் தொடர்பான கலந்துரையாடல்கள் நடைபெறவுள்ளன.

கைதடி வட்டவை — நாளை முற்பகல் 10 மணிக்கு, கைதடி முத்துக்குமாரசாமி வித்தியாலயத்திலும்;—

சாவகச்சேரி வட்டவை—நாளை பிற்பகல் 3 மணிக்கு, சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரியிலும்,

பளை வட்டவை — நாளை மறுதினம் (ஞாயிறு) முற்பகல் 10 மணிக்கு, பளை மகாவித்தியாலயத்திலும்,

கொடிகாமம் வட்டவை — நாளை மறுதினம் (ஞாயிறு) பிற்பகல் 3 மணிக்கு, கொடிகாமம் திருநாவுக்கரசு மகாவித்தியாலயத்திலும் கலந்துரையாடல்கள் நடைபெறவுள்ளன.

சிற்றூரவைகள், இணக்கமன்றங்கள் உற்பத்திக் குழுக்கள், கலை பண்பாட்டு அவைகள், மாதர் அமைப்புக்கள், ச. ச. நிலையங்கள் மற்றும் பொது அமைப்புக்கள் ஆகியவற்றைச் சேர்ந்த அனைவரையும் கலந்து கொள்ளுமாறு வி. பு. ம. முன்னணியினர் கேட்டுள்ளனர். (ஓ)

## பாவனையாளர் குழுக் கூட்டம்

யாழ்ப்பாணம், நவ 8

நல்லூர் உதவி அரச அதிபர் பிரிவுக்குட்பட்ட கிராமிய பாவனையாளர் பாதுகாப்புக் குழுக்களின் கூட்டம் ஒன்று நாளை முற்பகல் 10-30 மணிக்கு திருநெல்வேலி முத்துத்தம்பி மகாவித்தியாலயத்தில் நடைபெறும்.

இக் கூட்டத்தில் நல்லூர் உ. அ. அ. பிரிவைச் சேர்ந்த சகல கிராமிய பாவனையாளர் பாதுகாப்புச் சங்க உறுப்பினர்கள், கிராம அலுவலர்கள், பிரதேச பாவனையாளர் பாதுகாப்புச் சங்க உறுப்பினர்கள் ஆகியோரை கலந்துகொள்ளுமாறு நல்லூர் உ. அ. அதிபர் கேட்டுள்ளார். [ஓ]

## சில பொருள்கள் மீதான தடையை தளர்த்துவது குறித்து ஆராய்வு?

கொழும்பு, நவ. 8

சில குறிப்பிட்ட பொருள்களை வடக்கு-கிழக்குப் பகுதிகளுக்கு எடுத்துச் செல்வதற்கு விதிக்கப்பட்டிருக்கும் தடையைத் தளர்த்துவது குறித்து பாதுகாப்பு அமைச்சு ஆராய்ந்து வருவதாக கொழும்புப் பத்திரிகைச் செய்தி ஒன்று தெரிவிக்கிறது.

தற்போது வடக்கே எடுத்துச் செல்வதற்கு 48 பொருள்களுக்கும், கிழக்கே எடுத்துச் செல்வதற்கு 3 பொருள்களுக்கும் அரசு தடை விதித்திருப்பது தெரிந்ததே [இ-த]

## மின்னல் தாக்கி 2 பெண்கள் காயம்

அராலி, நவ 8

மாடு மேய்த்துக் கொண்டிருந்த இரு குடும்பப் பெண்கள் மின்னலினால் தாக்குண்டனர்.

அராலி மேற்கு கடற்கரைப் பகுதியில் கடந்த புதன்கிழமை இச்சம்பவம் இடம் பெற்றது.

எரிகாயங்களுக்கு உள்ளான இந்த இருவரும் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். [இ-12]

## மக்கள் கட்சியில் பிளவு

கொழும்பு, நவ. 8

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியுடன் மக்கள் கட்சி கூட்டுச்சேரும் முயற்சிகள் மேற்கொள்ளப்படுவதை அடுத்து மக்கள் கட்சிக்குள் பிளவு ஏற்படும் அபாயம் உருவாகி வருகிறது.

நிலப் பிரபுத்துவ பூர்சுவாக் கட்சியான சுதந்திரக் கட்சியுடன் கூட்டுச்சேர முடியாது என்று மக்கள் கட்சியின் தேசிய அமைப்பாளர் ஒஸி அபயகுணசேகரா தெரிவித்துள்ளார்.

விஜய குமாரணதுங்காவின் அரசியல் மார்க்கத்தையே கம் பின்பற்றப் போவதாகவும் ஒஸி அபயகுணசேகரா தெரிவித்தார்.

## சார்க் ஒத்திவைப்பு குறித்து இந்தியபத்திரிகைகள்கருத்து

சார்க் உச்சி மாநாடு ஒத்திவைக்கப்பட்டது பலருக்கு கவலையைக் கொடுத்துள்ளது: ஆனால் எவரும் அந்த முடிவு குறித்து ஆச்சரியப்படவில்லை.

"'இந்துஸ்தான் ரைம்ஸ்' நேற்று இப்படித் தெரிவித்தது.

அதேசமயம் சார்க் மாநாடு ஒத்திவைக்கப்பட்டதைத் தொடர்ந்து. இப்பிராந்திய சமபலத்தில் புதிய கோணம் ஒன்று ஏற்பட்டுள்ளது இதனைத் தாக்குப்பிடிக்கக் கூடியதாக புதிய முன்னணி ஒன்றை இந்தியா ஏற்படுத்த வேண்டும்'. - என்று 'இந்து' கூறியிருக்கிறது.

இதேவேளை - கொழும்பில் கடந்த புதன் இடம்பெற்ற செய்தியாளர் மாநாடு ஒன்றில் பேசுகையில், "சார்க் மாநாடு நடக்காமற் போனதற்குக் காரணம் இந்தியா அல்ல; மாநாடு ஒத்திவைக்கப்படுவதாக அறிவிக்கப்படும் வரை அம் மாநாட்டில் கலந்து கொள்ளுவதாகவே பிரதமர் நரசிம்மராவ் இருந்தார்"- என்று இந்திய வெளியுறவு இணை அமைச்சர் திரு எட்வர்டோ டெலரோ தெரிவித்திருந்தார். (இ - எ)

## புலிகளிடம் அமைதிப்படை தோல்வியுற தவறான மதிப்பீடும், குறுக்கீடும் காரணம்

### ஓய்வு பெற்ற கேர்ணல் கூறுகிறார்

சென்னை, நவ. 8

விடுதலைப் புலிகளுடனான போரில் அமைதிப்படையினர் தோல்வியடைந்தமைக்கு இந்தியப் புலனாய்வுத்துறையினரின் தவறான மதிப்பீடும், குறுக்கீடுகளுமே காரணமாகும்.

இந்திய அமைதிப்படையினரின் நடவடிக்கை பற்றி, இந்திய இராணுவத்தில் இருந்து ஓய்வுபெற்ற கேர்ணல் ரவிநந்தா என்பவர் எழுதிய புத்தகம் ஒன்றில் இப்படிக் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

அதில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது:-

விடுதலைப் புலிகளுக்கும் இலங்கை இராணுவத்தின் விசேட படைப்பிரிவுக்கும், கொழும்பில் உள்ள அமெரிக்கத் தூதரகத்தில் இருக்கும் ஒரு பிரிவு மூலமாக இஸ்ரவேல் அரசு பயிற்சி அளித்து வந்தது என்ற தகவலை இந்தியப் புலனாய்வுப் பிரிவு அலட்சியம் செய்தது.

அதன வேபேதான் விடுதலைப் புலிகளை யாரும் வெல்ல முடியாது என்ற போர்ச் சூழ்நிலையில், இந்திய அமைதி காக்கும் படை சிக்கிக் கொண்டது;

இரண்டரை வருடங்கள் விடுதலைப் புலிகளை எதிர்த்து இந்திய அமைதி காக்கும் படை போராடியது. அதனால் பேச்சைத் தவிர வேறு வழியில்லை என்ற நிலைக்கு விடுதலைப் புலிகள் தள்ளப்பட்டனர்;

ஆனால் பேச்சுக்கு வருமாறு இராணுவ நடவடிக்கைகள் மூலம் மேலும் அவர்களை நிர்ப்பந்திக்கும் முன்னர், அரசியல்வாதிகள் குறுக்கிட்டனர்.

இலங்கையில் இருந்து சீனர்கள். பிரிட்டிஷ் கூலிப்படையினர், பாகிஸ்தானியர் ஆகியோரை விலக்கி வைக்கவும்—

இலங்கையில் அமெரிக்கத் தளங்களுக்கு அனுமதி வழங்கப்படுவதைத் தடுக்கவுமே இந்திய - இலங்கை ஒப்பந்தத்தில் இந்தியா கையெழுத்திட்டது.

அதனைத் தொடர்ந்தே இந்திய அமைதி காக்கும் படை அங்கு அனுப்பப்படும் சூழ்நிலை ஏற்பட்டது.

—இப்படி கேர்ணல் ரவிநந்தா தனது நூலில் தெரிவித்துள்ளார். [உ-எ]

## பத்மநாபா கொலைச் சம்பவம்:

## கைதான இரண்டு பேரும் யாழ்., வல்லை வாசிகள்!

சென்னை, நவ 8

ஈ. பி. ஆர். எல். எவ் தலைவர் பத்மநாபா உட்பட அந்த அமைப்பின் 14 பேரைக் கொலை செய்த சம்பவம் தொடர்பாக தமிழ்நாடு பொலிஸாரால் கைது செய்யப்பட்ட இரண்டு ஈழத் தமிழர்களின் பெயர் விவரங்கள் வெளியாகியுள்ளன.

1. யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த தங்கவேல் ராஜாவின் மனைவியான சந்திரவதனா. இவர் திருச்சிக்கு அருகே உள்ள துறையூர் அகதி முகாமில் வைத்து கடந்த செவ்வாய்க்கிழமை பொலிஸாரினால் கைதுசெய்யப்பட்டார்.

2. வல்வெட்டித்துறையைச் சேர்ந்த ஜெயபாலசிங்கம். சைதாப்பேட்டை அகதிகள் முகாமில் வைத்துக் கைது செய்யப்பட்டார்.

அவர்கள் இருவரையும் பொலிஸார் விசேட நீதிபதி எஸ். எம். சித்திக் முன்னிலையில் ஆஜர் செய்தனர். ராஜீவ் கொலை வழக்குடன் பத்மநாபா கொலை வழக்கையும் விசாரித்து வரும் விசேட நீதிபதியான எஸ். எம். சித்திக், அவர்கள் இருவரையும் அடுத்தமாதம் 5 ஆம் திகதி வரை காவலில் வைக்கும்படி உத்தரவிட்டார்.

பத்மநாபா உட்பட ஈ. பி. ஆர். எல். எவ் தலைவர்களின் வருகை மற்றும் நடமாட்டம் குறித்து சந்திரவதனா தகவல் கொடுத்தார் என்றும்—

கொலையாளிகள் தங்குவதற்கு இடமளித்து அவர்களுக்கு உதவியதாக ஜெயபாலசிங்கம் மீதும் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

இந்த வழக்கு தொடர்பாக திருச்சியைச் சேர்ந்த மருதநாயகம் என்பவரையும் நேற்று பொலிஸார் கைது செய்தனர்.

ராஜீவ் காந்தி கொலை தொடர்பாக தேடப்பட்டு வந்த சிவராசனும், சுபாவும் சென்னையில் இருந்து பெங்களூருக்கு ஒரு டிராக்டர் மூலம் தப்பிச் செல்ல இவர் உதவியதாகக் கூறப்படுகிறது. [ஓ-எ-த]

## நல்லை ஆதீனத்தில்

யாழ்ப்பாணம், நவ. 8

கந்தசஷ்டியை முன்னிட்டு நல்லை ஆதீனத்தில் விசேட நிகழ்ச்சிகளுக்குஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

விரத நாட்களில் காலை பத்துமணிக்கு இலவச சிவதீட்சையும், பிற்பகல் 3 மணிக்கு ஆசிரிய வாசகரவை விரிவுரையாளர் திரு க. சிவபாலலிங்கம் அவர்கள் நிகழ்த்தும் கந்தபுராண உபந்நியாசமும் இடம்பெறும்.

பி. ப. 3 மணிக்கு ஆதீன புராண சபையினர் திருவிளையாடற் புராண படனம் நிகழும். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சார்க் மாநாடு ஒத்திவைக்கப்பட்டமை இ. காங்கிரஸுக்கு கவலையாம்!

புதுடில்லி, நவ. 8

சார்க் உச்சி மாநாடு ஒத்திவைக்கப்பட்டது இந்திரா காங்கிரஸ் கட்சிக்கு கவலையை ஏற்படுத்தியுள்ளதாக அக்கட்சியின் பேச்சாளர பேராசிரியர் தாக்கூர் நேற்று புதுடில்லியில் தெரிவித்தார்.

சார்க் உச்சி மாநாட்டுக்கான புதிய திகதியை நிர்ணயம் செய்ய விரைவில் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கட்சி விரும்புகிறது.

உச்சிமாநாட்டில் முக்கிய பிரச்சினைகள் விவாதிக்கப்படும் என எதிர்பார்க்கப்பட்ட தருணத்தில் அது ஒத்திவைக்கப்பட்டது ஏமாற்றத்தைத் தருவதாக அமைந்தது என்றும் பேராசிரியர் தாக்கூர் சொன்னார்.

(உ-எ)

# 8 மாத போராட்டத்தின் பின் எண்ணெய் வயல் தீ அணைப்பு

லண்டன், நவ. 8

வளைகுடா யுத்தத்தின் போது குவைத்தின் எண்ணெய் வயல்களில் ஏற்பட்ட தீ தற்போது முற்றாக அணைக்கப்பட்டு விட்டது.

குவைத் எண்ணெய் வயல்களில் ஏற்பட்ட தீயை அணைப்பதற்காக கடந்த எட்டு மாதங்களாக பத்து நாடுகளைச் சேர்ந்த 27 தீயணைப்புப் படையினர் பெரும் போராட்டம் நடத்தி வந்தனர்.

கடைசித் தீ கடந்த புதன்கிழமை அணைக்கப்பட்டதைத் தொடர்ந்து இடம்பெற்ற வைபவம் ஒன்றில் குவைத் மன்னரும் மற்றும் அரபு நாடுகளின் தலைவர்கள் சிலரும் கலந்து கொண்டனர். கடந்த புதன்கிழமை குவைத்தில் பொது விடுமுறை தினமாகப் பிரகடனப் படுத்தப்பட்டது.

(இ-த)

# பிலிப்பீன்ஸில் சூறவளி அனர்த்தம்; 6,500 பேருக்கு மேல் உயிரிழப்பு?

மணிலா, நவ 8

பிலிப்பீன்ஸில் நேற்று முன்தினம் வீசிய சூறவளி காரணமாக உயிரிழந்தோர் அல்லது காணமலேபோனோரின் எண்ணிக்கை 6 500க்கு அதிகம் என்று தற்போது அறிவிக்கப்பட்டுள்ளது.

கிழக்கு மாகாணத்தில் மட்டும் 6,500 பேர் காணமலோ அல்லது இறந்தோ போயுள்ளனர் என்றும், ஒரு நகரில் மட்டும் குறைந்தது 2 ஆயிரம் பேர் இறந்தனர் என்றும் கூறப்படுகிறது.

(ஓ-எ)

# மதுசாரம் கலந்த மருந்தைக் குடித்து நூறு பேர் வரை புதுடில்லியில் பலி!

புதுடில்லி, நவ. 8

புதுடில்லியில் மதுசாரம் கூடுதலாகக் கலக்கப்பட்ட 'சூறா' என்ற ஆயுள்வேத மருந்தைக் குடித்ததினால் உயிரிழந்தோரின் எண்ணிக்கை நூறைத் தாண்டி விட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இன்னும் நூற்றுக்கு அதிகமானோர் கவலைக்கிடமான நிலையில் மருத்துவமனைகளில் அனுமதிக்கப்பட்டிருக்கின்றனர்.

இதனிடையில்—'சூறா' ஆயுள்வேதமருந்தைக் குடிக்க வேண்டாம் என்று இந்திய மக்களை சுகாதார அதிகாரிகள் கேட்டுள்ளனர்.

இவேளை —

அந்த மருந்தைத் தயாரித்துவந்த தொழிற்சாலையை அதிகாரிகள் நேற்றுப் பூட்டி சீல் வைத்தனர். 21 பேர் இதுவரை கைது செய்யப்பட்டு காவலில் வைக்கப்பட்டனர்.

தீபாவளி தினத்தன்று புதுடில்லி புறநகர்ப் பகுதி ஒன்றைச் சேர்ந்தவர்கள் போதைக்காக அந்த மருந்தைக் குடித்தனர் என்றும், அந்த மருந்து கெட்டுப்போய் இருந்ததும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

[உ-எ]

# இந்தியாவின் நிலைப்பாடு பலருக்கு ஆச்சரியம்!

கொழும்பு, நவ. 8

கடந்த வருட 'சார்க்' மாநாட்டின் போது ஏற்ற நடைமுறையை இந்த வருட சார்க்கிலேயே ஏற்க இந்தியா மறுத்திருப்பதை பல வெளிநாட்டு செய்தி விமர்சகர்கள் ஆச்சரியத்துடன் சுட்டிக்காட்டியிருக்கிறார்கள்.

கடந்த வருடம் மாலைதீவு சார்க் மாநாட்டில், ஸ்ரீலங்காவின் சார்பில் அந்த நாட்டின் ஆட்சித் தலைவரான ஜனாதிபதி ஆர். பிரேமதாஸா பங்குபற்றவில்லை. அவருக்குப் பதிலாக அவரின் பிரதிநிதியாக ஸ்ரீலங்கா பிரதமர் டி. பி. விஜேதுங்க பங்குபற்றினார்.

அதனை அப்போது ஏற்றுக்கொண்டு அந்த மாநாட்டில் இந்தியா பங்குபற்றியது.

ஆனால் இம்முறை பூட்டான் மன்னருக்காக அவரின் பிரதிநிதி பங்குபற்றுவதை இந்தியாவால் ஏற்றுக்கொள்ள முடியாமல் போனது ஏன்? — என்று பல விமர்சகர்கள் கேள்வி எழுப்பியுள்ளனர்.

[உ-3]

# 'குமண... கப்பல் இன்று... ப்பாடு

கொழும்... ...ச்சைக்க... கச் செல்ல... நோயாளி... களையும், ...து உதவி... யாளர்கள்... அரச அலு... வல்களுக்கா... லும் அதி... காரிகள் ஆ... ரயும் ஏற்... றிக் கொ... ண' கப்... பல் இன்று... துறையி... லிருந்து பு... ச செல்ல... வுள்ளது.

(உ-5)

# இந்திய...ன்..

[1 ஆம் பக்... ...ர்ச்சி]

ஒத்திவை... ...வேண்டிய... தாயிற்று.'' ...ஜனாதி... பதி பிரேம... ...தனது வர... வேற்புரையில் சொன்னார்.

# கடற்பல...

[1 ஆம் பக்க... தொடர்ச்சி]

பொருள்களை ...ந்த வழியாக குடாநாட்டில் ...ஏனைய பகுதிகளுக்கு ...கொண்டு வருவது என்பது ...பற்றி முடிவு செய்வதில் இ...ன்னும் இழுபறி நிலை நிலவுவ...தாக சொல்லப்படுகிறது.

தீவுப் பகுதியி...ல் சிக்குண்ட மக்கள் அவசர ...சிகிச்சைக்கு யாழ்ப்பாணம் ...வரமுடியாது உள்ளது. ஆ...பத்தான நோயாளிகளை யாழ் போதனா ஆஸ்பத்திரிக்கு கொண்டு வருவதற்கு செஞ்சிலுவைச் சங்க அனுசரணையுடன் அவசர வைத்திய படகுச்சேவை ஒன்றை நடத்தும் சாத்தியக்கூறு குறித்து ஆலோசிக்கப்பட்டு வருகிறது.

இந்த இரண்டு விடயங்கள் தொடர்பாகவும் கலந்துரையாடி, இறுதி முடிவுகளைச் செய்வதற்காக செஞ்சிலுவை சங்க சர்வதேசக் குழுவின் பிரதிநிதிகள் நேற்று காரைநகர் சென்றிருந்தனர் என அறியவந்தது.

[அ-3]

# மாவீரர் நாள்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

வீரத் தமிழனின் விடுதலை வேட்கையை எடுத்தியம்புகின்றன. அவற்றில் பொறிக்கப்பட்டிருக்கும் வசனங்கள் நெஞ்சைத் தொடுகின்றன; அதே சமயம் வீர உணர்வையும் ஊட்டுகின்றன.

இன்னும், மாவீரனைச் சுமந்தபடி வீறுநடை போடும் போராளியின் சித்திரம், ஆனையிறவு களத்தில் வேங்கைகள் நடத்திய துணிச்சலான, வீரமிகு தாக்குதல் சம்பந்தப்பட்ட சித்திரங்கள் போன்றவையும் வளைவுகளில் சித்திரிக்கப்பட்டுள்ளன.

# அகதி முகாம்...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

சாங்கத்தால் போதியளவு இங்கு அனுப்பப்படுவதில்லை என்றும்—

அதற்கு மாற்றீடாக வழங்கப்பட்ட "ஜீவாகாரம்" தயாரிக்க தேவையான மூலப் பொருள்களும் இங்கு போதியளவு இல்லை— என்றும் தெரிவிக்கப்பட்டது.

சிறார்களுக்குப் போஷாக்கான உணவு, மற்றும் மருத்துவ வசதிகளை வழங்க வேண்டிய ஏற்பாடுகள் குறித்து செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழு அதிகாரிகளும், சிறுவர் பாதுகாப்பு நிதிய அதிகாரிகளும், சுகாதார அதிகாரிகளும் தீவிரமாக ஆராய்ந்து வருகிறார்கள்.

போஷாக்கு நிறைந்த உணவுப் பொருள்களை அல்லது ஜீவாகாரம் தயாரிக்கத் தேவையான மூலப் பொருள்களைக் கப்பல் மூலம் தருவிக்க அவசர நடவடிக்கை எடுக்கப்படவிருப்பதாக அறிய வருகிறது.

(அ-3)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி, 292/2 ... 8-11-1991 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# மருந்து வகை வந்தும் விலைகள் குறையவில்லை!

யாழ்ப்பாணம், நவ. 8

அத்தியாவசிய மருந்து வகைகளை விற்பனை செய்யும் போது நியாயமாக நடந்து கொள்ளுமாறு மருந்துப் பொருள் விற்பனையாளர்களை யாழ். அரச அதிபர் கேட்டுள்ளார்.

மிகத் தேவையான மருந்து வகைகளின் கணிசமான அளவை எடுத்து வந்துள்ள மூன்று மொத்த வியாபாரிகள், பிரஸ்தாப மருந்து வகைகளின் ஆகக் கூடிய விற்பனை விலையின் பட்டியலை யாழ். அரச அதிபரிடம் ஒப்படைத்துள்ளனர்.

அவற்றில் குறிப்பிடப்பட்ட விலைப்படி தாம் சில்லறை வியாபாரிகளுக்கு மருந்துப்பொருள்களை வழங்கவும் அவர்கள் சம்மதித்துள்ளனர்.

கடைசியாகப் பருத்தித்துறைக்கு வந்த "குமண" கப்பலில் தனியார்துறையைச் சேர்ந்த மருந்துப்பொருள் மொத்த வியாபாரிகள் சிலருக்கு அதிகளவு மருந்து வகைகள் எடுத்துவரப்பட்டிருந்தன.

ஆயினும் விற்பனை நிலையங்களில் சாதாரண மருந்துப் பொருள்கள் கூட, அதிக விலைக்கு விற்கப்பட்டு வருவதாக நோயாளர்கள் முறைப்பாடு செய்கின்றனர்.

[அ-5]

# 2,300 மெற்றிக் தொன் உரம் யாழ். வந்து சேர்ந்தது

யாழ்ப்பாணம், நவ. 8

யாழ் மாவட்ட விவசாயிகளின் தேவைக்கென இரண்டாயிரத்து முந்நூறு மெற்றிக் தொன் உரவகைகள் வந்து சேர்ந்துள்ளன.

கப்பல்கள் மூலம் வந்து சேர்ந்துள்ள இந்த உரவகைகள் வடபகுதியில் உள்ள பன்னிரண்டு கமநல சேவை நிலையங்களுக்கும் வழங்கப்படும் என்றும், இதில் ரி. டி. எம்., அமோனியம் சல்பேற் போன்றவை கூடுதலாக வந்துள்ளன என்றும் உரக் கூட்டுத்தாபனத்தின் யாழ் மாவட்ட சந்தைப்படுத்தும் உத்தியோகத்தர் திரு. ஜி. சிதம்பரநாதன் உதயனுக்குத் தெரிவித்தார்.

(ஓ-100)

# வயிற்றோட்டத்தினால் சிசு பலி!

யாழ்ப்பாணம், நவ. 8

அகதி முகாம் ஒன்றில் வயிற்றோட்ட நோயினால் பாதிக்கப்பட்ட குழந்தை, ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்படும் வழியிலேயே மரணமானது.

யாழ். கனகரத்தினம் மகா வித்தியாலயத்தில் அமைந்திருக்கும் அகதி முகாமில் தங்கியுள்ள— புங்குடுதீவு பத்தாம் வட்டாரத்தைச் சேர்ந்த — ஜோர்ஜ் என்பவரின் ஒன்றரை வயதுக் குழந்தை சிந்துஜாவே இவ்வாறு மரணமானது.

யாழ். மாவட்டத்தில் உள்ள அகதி முகாம்களில் வயிற்றோட்ட நோய் தீவிரமாகப் பரவி வருவதாகவும், ஆஸ்பத்திரிகளில் சிகிச்சை பெறுவோர் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாகவும் சொல்லப்படுகிறது.

[அ-131]

# உணவுப்...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

250 மெற்றிக் தொன் சீனி, 5 மெற்றிக்தொன் சோயினை, 2 மெற்றிக்தொன் தீப்பெட்டி உட்பட பல பொருள்கள் எடுத்துவரப்பட்டுள்ளன.

[உ-5]

# இலங்கைக்கு...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

லங்காவை எமது நட்பு நாடாகக் கருதுகிறோம்.

ஆப்கானிஸ்தான் பிரச்சினையின் போது ஸ்ரீலங்கா எமக்கு அளித்த உதவியை நாம் மறக்கமாட்டோம்.

சமாதானத்திலும், பிரச்சினையிலும் ஸ்ரீலங்காவுடன் பாகிஸ்தான் கைகோர்த்து நிற்கும்.

கடைசி நேரத்தில் சார்க் மாநாடு ஒத்திவைக்கப்பட்டமை ஏமாற்றத்தை தருகிறது.

எமது நாடும் அரசும் ஸ்ரீலங்காவுக்கு உற்ற நண்பனாக இருந்து, சார்க் கொள்கைகள் வெற்றிபெற உழைக்கும்— என்றார் அவர்.

பாகிஸ்தான் பிரதமரின் பேச்சு மறைமுகமாக இந்தியாவை தாக்குவதாக அமைந்திருந்தது என்று பி. பி. ஸி. தெரிவித்தது.

(உ-3)

# ஆறு ஆலயங்களில் நூல் வெளியீடு

சுழிபுரம், நவ. 8

முருகப் பெருமானின் ஆறு படை வீடுகளையும் போற்றிப் பாடப்பட்ட ஆறு திருப்புகழ்களின் தொகுப்பு நூல் இன்று குடாநாட்டில் உள்ள ஆறு ஆலயங்களில் வெளியிடப்படும்.

வழக்கம்பரை பஜனைச் சபையினரால் அச்சிடப்பட்ட இந்நூல் பண்ணாகம், சுழிபுரம், தொல்புரம், பண்டத்தரிப்பு, உரும்பராய், சாவகச்சேரி ஆகிய இடங்களில் உள்ள ஆறு முருகன் ஆலயங்களில் வைத்து வெளியிடப்படும்.

(அ-28)

# மரண அறிவித்தல்

## சோ. சடாட்சரம்

(இளைப்பாறிய தபாலதிபரும், முன்னைநாள் நாவற்குழி கிராம சபைத் தலைவரும்)

சோ. சடாட்சரம் அவர்கள் 7-11-1991 வியாழன் அன்று சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சிவபாக்கியத்தின் அன்புக் கணவரும், சோமலிங்ககுமாரின் அன்புத் தந்தையும், சிவகுமாரியின் அன்பு மாமனாரும், ஆர்த்தி, விஷ்ணன், கிஷாந்தன் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 8-11-1991 மாலை 3-00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெறும்.

தகவல்:
ச. சோமலிங்ககுமார்
(மகன்)

நாவற்குழி.
கைதடி.

[18440]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org